## மது வரி வெகுமதி நிதியம் - 2016

இலங்கை மது வரி திணைக்களத்தின் மது வரி வெகுமதி நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று. காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1912 இன் 8 ஆம் இலக்க மது வரி கட்டளைச் சட்டத்தின் 58 ஏ பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட 1994 மார்ச் 4 ஆம் திகதிய 818 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலின் 1(iii) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறித்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.
நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மது வரி திணைக்களத்தின் மது வரி வெகுமதி நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் ஏற்பாடுகளுக்கு முரணாக நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் காசு அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தன. அவ்வாறே ரூபா 38,173,542 தொகையான பெறுமானத்தேய்வு ஒதுக்க நிதியக் கணக்கின் மீதி குறுங்கால அசையாத சொத்தொன்றாக இருந்த போதிலும், நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்தொன்றாக காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 2.2.2 கணக்குகளை சமர்ப்பித்தல் மற்றும் பேணிச்செல்லல்

நிதியத்தின் கணக்கு நடவடிக்கைகளுக்காக பொது பேரேடொன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

1999 இன் 8 ஆம் இலக்க புகையிலை வரி அதிகாரச்சட்டத்தின் 17 ஆம் பிரிவு மதுவரி ஆணையாளர் நாயகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் காணப்படுகின்ற புகையிலை வெகுமதி நிதியம் தாபிக்கப்பட்டு புகையிலை வரி அதிகாரச்சட்டத்தின் கீழ், அறவிடப்படும் தண்டப் பணத்தில் 1/4 பங்கு புகையிலை வெகுமதி நிதியத்திற்கு மாற்றப்பட வேண்டியிருந்த போதிலும், புகையிலை நிதியமொன்று தயாரிக்கப்படாது புகையிலை தண்டப்பணப் பெறுவனவுகளும், மது வரி வெகுமதி நிதியத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே குறித்த பணத்தை புகையிலை வெகுமதி நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய தொகையாக மது வரி வெகுமதி நிதியத்தின் நிதி நிலைமைக்கூற்றின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ரூபா 75,164,200 நிலையான சொத்துக்களுக்காக மெய்மையாய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் நிதியத்திற்குச் சொந்தமாக காணப்படுவதாக அறிக்கையிடப்பட்டுள்ள ரூபா 47,134,000 பெறுமதியான காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாகவும் ஆவணங்களுக்குட்பட்ட சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டின் போது நிதியத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 32,263,375 மிகையாக இருந்ததுடன் இதற்கு ஒப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 79,009,718 ஆக இருந்தமையால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 46,746,343 தொகையான குறைவொன்றினைக் காட்டியது. இணக்க கட்டணப் பெறுவனவுகள் ரூபா 45,895,124 ஆல் அதாவது 25 சதவீதத்தினால் குறைவடைந்தமை இம் மிகையில் குறைவிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

நிதியம் ஏற்படுத்தப்பட்டதன் நோக்கங்கள் பின்வருமாறு,

- ❖ மதுவரி உத்தியோகத்தர்கள், தகவல் வழங்குனர்கள் மற்றும் ஏனையோருக்கு வெகுமதித் தொகை செலுத்துதல்.
- ❖ பயிற்சியளித்தல் மற்றும் கல்விச் செயற்பாடுகளுக்கு பணம் வழங்குதல்
- ❖ ஆண்டிற்கு ரூபா 50,000 எல்லையின் கீழ் மதுவரித் திணைக்களத்தின் பதவியணியினரின் விளையாட்டு, களியாட்ட மற்றும் நலன்புரி வேலைகளுக்கு பணம் வழங்குதல்.
- ❖ மது வரித் திணைக்களத்திற்கு தேவையான பொருட்கள், உபகரணங்கள் கொள்வனவு செய்தல்.
- ❖ பாராட்டக்கூடிய வேலைகள், துணிச்சலான செயற்பாடுகள் அல்லது விஷேட ஏற்றுக் கொள்ளல் போன்ற வேறு செயற்பாடுகளுக்கும் வெகுமதிப் பணம் வழங்குதல், மற்றும்
- ❖ விஷேட கடமைகள் அல்லது விஷேட சுற்றி வளைப்புக்களுக்காக பிரதேசங்களில் சுற்றி வளைப்புக்களில் ஆளணியினரை ஈடுபடுத்தும் போது திணைக்களத்திற்கு ஏற்படும் செலவினங்களைத் தீர்த்தல்

இந்த நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) நிதியத்திற்கு கிடைக்கும் பிரதான பெறுவனவுக்கான இணக்கக் கட்டணங்கள் மற்றும் சிகரட் தண்டப்பண வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

| **பெறுவனவு** | **2016** | **2015** |
|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** |
| இணக்கக் கட்டணங்கள் | 133,500,640 | 178,507,964 |
| சிகரட் தண்டம் | 3,453,950 | 4,341,750 |
| **மொத்தம்** | **136,954,590** | **182,849,714** |

2015 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் தொழில்நுட்ப குற்ற வருமானம் ரூபா 45,007,324 ஆல் அதாவது 25 சதவீதத்தினால் குறைவடைந்திருந்ததுடன், சிகரட் தண்டப்பணம் வருமானம் ரூபா 887,800 ஆல் அதாவது 20 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. மதுவரி உத்தியோகத்தர்களின் அர்ப்பணிப்பு அடிப்படையில் தொழில்நுட்ப குற்றங்கள் குறைவடைந்தமை இணக்கக் கட்டண வருமானம் குறைவடைவதற்கு காரணமாக இருந்ததாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும், உத்தியோகத்தர்களால் முன்னைய ஆண்டுகளில் மேற்கெள்ளப்பட்டிருந்த சுற்றிவளைப்புகள் அளவு குறைவடைந்தமையும் வருமானம் குறைவடைவதற்காக போதியளவு தாக்கம் செலுத்தியிருந்ததாக அவதானிக்கப்பட்டது.

(ஆ) உத்தியோகத்தர்களின் பயிற்சி மற்றும் கல்வி நடவடிக்கைகளுக்காக மீளாய்வாண்டில் ரூபா 4,500,000 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் பயிற்சி பெற்ற புதிய உத்தியோகத்தர்களுக்கு உணவு வழங்கலுக்காக மாத்திரம் அதில் ரூபா 2,331,515 தொகை அதாவது 52 சதவீதம் செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறே எஞ்சிய ரூபா 2,168,485 தொகை எவ்வித பயிற்சி நடவடிக்கைகளுக்காகவும் செலவிடப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் நிறுவகத்தின் உத்தியோகத்தர்களின் பயிற்சி மற்றும் கல்வி நடவடிக்கைகளுக்காக முறையான திட்டமொன்று தயாரிக்கப்பட்டு நிதிஏற்பாடு அங்கீகரிப்பட்டிருந்தமை அவதானிக்கப்படவில்லை.

(இ) நிதியத்தின் நோக்கமான பாராட்டக்கூடிய செயற்பாடுகள், நேர்மையான செயற்பாடுகள் அல்லது விசேட ஏற்றுக்கொள்ளல் போன்ற நடவடிக்கைகளுக்கு கொடுப்பனவு செய்வதற்காக ரூபா 200,000 பணமும் விளையாட்டு, களியாட்டம் மற்றும் நலன்புரி நடவடிக்கைகளுக்கு கொடுப்பனவு செய்வதற்காக ரூபா 50,000 பணமும் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், இந்த ஒதுக்கீடு முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிதியத்தின் நோக்கங்கள் தொடர்பாக போதியளவு கவனம் செலுத்தப்பட்டிருந்ததாக அவதானிக்கப்படவில்லை.

(ஈ) மது வரி தொழில்நுட்ப குற்ற சுற்றிவளைப்புக்கள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்புக்களில் குறைவுகள் முறையே 1101, 387 மற்றும் 339 ஆக இருந்தன. மீளாய்வாண்டின் போது 48 புதிய மது வரி பரிசோதகர்கள் ஆட்சேரப்பு செய்யப்பட்டிருந்த போதிலும் தொழில்நுட்ப குற்ற சுற்றிவளைப்புக்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பொன்று அவதானிக்கப்படவில்லை.

(உ) திணைக்களத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள விசேட செயற்பாட்டு பிரிவு மற்றும் மதுவரி அலுவலகத்திற்காகவும் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவிற்காகவும் மீளாய்வாண்டின் போது 355 உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டிருந்தனர். மீளாய்வாண்டிற்காக செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் அச்செயற்பாடுகளில் தொழில்நுட்ப குற்றங்கள் தொடர்பான இலக்கிடப்பட்ட சுற்றிவளைப்புக்கள் மற்றும் உள்ளவாறான சுற்றிவளைப்புக்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| நிலையம் | உத்தியோகத்தர் களின் எண்ணிக்கை (மது பரிசோதகர் ம.அத்தியட்சகர்கள்) | 2016/12/31 இல் இலக்கிடப்பட்ட சுற்றி வளைப்புக்கள் | 2016/12/31 இல் உள்ளபடியான சுற்றி வளைப்புக்கள் |
|---|---|---|---|
| விசேட செயற்பாட்டு அலகு -மத்திய | 10 | - | 57 |
| விசேட செயற்பாட்டு அலகு - வடமேல் - | 14 | 100 | 108 |
| விசேட செயற்பாட்டு அலகு - தெற்கு | 05 | - | 17 |
| விசேட செயற்பாட்டு அலகு - வடமத்திய | 10 | - | 19 |
| விசேட செயற்பாட்டு அலகு - கொழும்பு | 19 | - | 209 |
| பிரதேச அலுவலகங்கள் | 281 | 3513 | 4183 |
| | 339 | 3613 | 4,593 |

மேற்குறித்த அட்டவணையின் பிரகாரம் வடமேல் மாகாணம் மற்றும் பிராந்திய அலுவலகங்களுக்காக 3613 இலக்கிடப்பட்ட சுற்றி வளைப்புக்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், மத்திய, தென், வடமத்திய மாகாணங்களில் அமைந்துள்ள விசேட செயற்பாட்டு அலகு என்பவற்றிற்காக இலக்கிடப்பட்ட எண்ணிக்கைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கொழும்பு மாவட்டத்தில் அமைந்துள்ள விசேட செயற்பாட்டு அலகிற்கும் இலக்கிடப்பட்ட எண்ணிக்கைகள் வழங்கப்படாதிருந்ததுடன் அவ்வாறு இலக்கிடப்பட்ட எண்ணிக்கை வழங்கப்படாமைக்கான காரணங்கள் கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1994 மார்ச் 04 ஆம் திகதிய 818 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலின் (ஆ)பிரிவின் பிரகாரம் தாபிக்கப்பட்ட ‘‘மதுவரி வெகுமதி’’ நிதியத்திலிருந்து மதுவரி உத்தியோகத்தர்களுக்கும் தகவல்களை வழங்குபவர்களுக்கும் ஏனைய தரப்பினருக்கும் வெகுமதிகளை வழங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்ட எழுத்துமூல நடைமுறையொன்று 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கீழே காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை சீராக்குவதற்காக முகாமைத்துவத்தினால் முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(i) தீர்ப்பனவுக் கட்டணங்கள் தொடர்பாக வெகுமதி கொடுப்பனவிற்குரிய பிராந்திய அலுவலகங்கள் தவிர தலைமை அலுவலகத்தில் அறிக்கையிடல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) எதிர்காலத்தில் கடந்த தொழில்நுட்ப குற்றங்களில் அறிக்கை எந்தளவு அளவிற்காக கொடுப்பனவு கொடுப்பனவு செய்யப்பட வேண்டுமென தகவல்கள் பராமரிக்கப்படாமை.

(iii) குற்றத்தடுப்பு பிரிவு மற்றும் நிதிப் பிரிவு தொடர்புபட்டு நடவடிக்கை எடுக்கப்படாமை.

(iv) தொழில்நுட்ப குற்றங்கள் அறிக்கையிடல் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்படாமை.

### 4.3 விளைவற்ற மற்றும் குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

நிதியத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 77,690 பெறுமதியான நூலகப் புத்தகங்களின் இருப்பொன்று 04 வருட காலமாக குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டன.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல்நடவடிக்கையைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 1/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மது வரி வெகுமதி நிதியத்திற்கு மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படவில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

06 செலவின விடயங்களுக்குரிய பாதிடப்பட்ட எண்ணிக்கைக்கும் உள்ளபடியான எண்ணிக்கைக்கும் இடையே 37 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் அவ்வப்போது மது வரி ஆணையாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுப் பரப்பு | | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | முறையாக பேரேட்டுக் கணக்குகள் பேணப்படாமை. |
| (ஆ) | சொத்துக்கள் கட்டுப்பாடு | முறையாக பதிவேடுகள் பேணப்படாமை மற்றும் மெய்மையாய்வு செய்யப்படாமை . |